அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண்**:12 /2017
**தேதி**: 23.1.2017

## அறப்போராட்டம் அமைதி வழியில் முடிக்கப்பட வேண்டும்

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்

மிக சிறந்த முறையில் அற வழியில் போராடி சட்ட ரீதியாகவும் போராட்டத்திற்கு வெற்றி கண்டிருக்கும் மாணவர்களும் இளைஞர்களும், உலகத்திற்கே முன் உதாரணமாக செயல்பட்டு தமிழகத்தின் பெருமையை உலகத்திற்கே பறைசாற்றியுள்ளனர். இதற்கு மீண்டும் எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

ஆனால் தற்போது மாணவர்கள் என்ற போர்வையில் சில விஷமக்காரர்களின் சூழ்ச்சிகளாலும், தூண்டுதலாலும் போராட்டம் திசை திருப்பப்பட்டு வன்முறை நோக்கி செல்வது வேதனை அளிக்கிறது.

உங்களின் மகத்தான முயற்சியும், வெற்றியும் இந்திய துணைக்கண்டத்தை தாண்டி உலகளவில் பாராட்டுகளை பெற்றிருக்கிறது. இந்த பெருமை மிகு புரட்சியை திசை திருப்பி, உங்களுக்கு அவ பெயர் உண்டாக்கி, உங்கள் கொள்கைகளின் வலிமையை குறைக்கும் முயற்சிக்கு பலியாகி விட வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பாராளுமன்ற கூட்டத்தொடரில் சட்ட திருத்தம் நடைபெறா விட்டால் உங்கள் அற போராட்டத்தை தொடரலாம்.

எனவே, சமுதாயத்தில் சுய லாபத்திற்காக சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நீங்களும் உங்கள் உழைப்பும் விரயமாகி விடாமல் கவனமாக செயல்பட வேண்டிய தருணம் இது. எனவே பொறுமை காத்து அமைதி நிலவ செய்யுமாறு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்